# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண். 06/2025** **நாள் : 26.01.2025**

**குடியரசு தினத்தை முன்னிட்டு இன்று (26.01.2025)**
**சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில்**
**மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், இ.ஆ.ப., அவர்கள்**
**தேசியக் கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்கள்.**

குடியரசு தினத்தை முன்னிட்டு இன்று (26.01.2025) சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து, மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், இ.ஆ.ப., அவர்கள், சென்னை குடிநீர் வாரியத்தில் 25 ஆண்டு காலம் அப்பழுக்கற்ற முறையில் சிறப்பாகப் பணியாற்றிய பணியாளர்களைப் பாராட்டி சான்றிதழ்கள் மற்றும் காசோலைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., நிதி இயக்குநர் திரு.எம். ஸ்ரீனிவாச ராகவன், பொறியியல் இயக்குநர் திரு.இரா.சிவமுருகன், தலைமைப் பொறியாளர்கள் திருமதி.ஓ.பர்வீஸ், திருமதி.டி.மைதிலி, கண்காணிப்புப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்.

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in